**செ. கு. எண்**:380 **நாள்**:28.10.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.10.2012

23.10.2012 அன்று விழுப்புரம் நகரம், சென்னை – திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையில், ஜானகிபுரம் பைபாஸ் அருகில், சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி சென்று கொண்டிருந்த காரின் மீது, மதுரையிலிருந்து விழுப்புரம் வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில், காரில் பயணம் செய்த சென்னை, மேடவாக்கத்தைச் சேர்ந்த திரு. பழனியப்பன் என்பவரின் மனைவி திருமதி மலர்கொடி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

26.10.2012 அன்று திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு கிராமம் அருகே வத்தலக்குண்டு – குள்ளப்புரம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தில் பயணம் செய்த பழைய வத்தலக்குண்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியசாமி என்பவரின் மகன் செல்வன் லட்சுமணன், பேருந்தில் ஏறும் போது தவறி கீழே விழுந்து பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த திருமதி மலர்கொடி மற்றும் செல்வன் லட்சுமணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துக்களில் உயிரிழந்த திருமதி மலர்கொடி மற்றும் செல்வன் லட்சுமணன் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**